உ

இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில்**

**பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம்**

**திருவள்ளூர் மாவட்டம்**

**தொலைபேசி 044-27927177, அலை பேசி 9444 487 487**

மின்னஞ்சல் : periyapalayambhavaniamman@gmail.com

வலைதளம் : www.omsribhavaniammantempleperiyapalayam.org

ITMS Code : 1642

---

## திருக்கோயிலில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள காணிக்கை தலைமுடிகள்
## இ–ஏல விளம்பர 4வது அறிவிப்பு

இத்திருக்கோயிலில், பக்தர்களால் காணிக்கையாக செலுத்தி சேகரித்து வைக்கப்பட்டுள்ள கீழ்காணும் விவரப்படியான தலை முடிகளை மட்டும் 17.12.2025 தேதியில் MSTC நிறுவன இணையதள முகவரியில் MSTC / SRO / ARULMIGHU BHAVANI AMMAN TEMPLE / 8 / PERIYAPALAYAM / 25-26 / 48302 நன்பகல் 12.00 மணியளவில் இ–ஏலம் முறையில் விற்பனை நடைபெறும். இ–ஏலத்தில் கலந்துக்கொள்ள விரும்புவோர் அதற்கு எதிரே குறிப்பிட்டுள்ள விவரப்படி டெபாசிட் தொகையினை MSTC நிறுவனம் மூலம் செலுத்தி இ–ஏலத்தில் கலந்துக்கொள்ளலாம். இ–ஏலத்திறப்பு தொடர்பான அறிவிப்பு www.mstcindia.co.in, www.omsribhavaniamman templeperiyapalayam.org, www.hrce.tn.gov.in என்ற இணைதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். முக்கிய விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்தங்கள் தொடர்பான விவரங்கள் (www.mstcindia.co.in) – ல் மட்டுமே வெளியிடப்படும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.

**இ–ஏலம் நடைபெறும் நாள் 17.12.2025 நேரம் நன்பகல் 12.00 மணி**

| வ.எண் | லாட் எண் | விவரம் | எடை கிலோ | செலுத்த வேண்டிய டெபாசிட் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 4. | 4ம் ரகம் 5" முதல் 9" வரை கருப்பு முடி | 144.900 | 70,000/- |
| 2. | 8. | ஜடை முடி (கருப்பு, கிரே கலந்தது) | 59.600 | 50,000/- |

**இ–ஏல நிபந்தனைகள்**

1. இந்துக்கள் அல்லாதவர்கள் இந்த இ–ஏலத்தில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2. MSTC நிறுவனத்தில் இ–ஏலத்தில் உரிமம் பெற்றவர்கள் மட்டுமே, மேற்படி இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள டெபாசிட் செலுத்தியவர்கள் மட்டுமே கலந்துக்கொள்ள வேண்டும்.

3. இத்திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்காடியவர்கள், ஏல நிபந்தனைகளுக்கு கட்டுப்பட மறுப்பவர்கள் இ-ஏலத்தில் கலந்துக்கொள்ள தகுதியற்றவர்கள் ஆவார்.

4. இ-ஏலம் கேட்பவர்கள், MSTC நிறுவனத்தில் இ-ஏலம் உரிமம் பெற்றதற்கான உரிமத்தின் அசல் மற்றும் நகலுடன் இத்திருக்கோயில் அலுவலகத்தில் விண்ணப்பித்தவர்கள் மட்டுமே, ஒரு உதவியாளருடன் திருக்கோயில் வளாகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள காணிக்கை தலைமுடிகளை **07.12.2025 காலை 11.00 மணி முதல் 17.12.2025 அன்று மாலை 5.00 மணி** வரையில் பார்வையிட்டு, முடியின் தரத்தினை தெரிந்துக்கொண்டு ஏலத்தில் கலந்து ஏலம் கேட்க வேண்டும்.

5. இ-ஏலத்தில் விற்பனை செய்த பிறகு டெலிவரி வழங்கும் நேரத்தில் தரத்தினை பரிசோதிக்க அனுமதி இல்லை. எடை கணக்கிட்டு மட்டுமே வழங்கப்படும்.

6. இ-ஏலம் கோருபவர்கள் சம்பந்தப்பட்ட இ-ஏல இனத்தை பார்வையிட்டும், இ-ஏலம் நிபந்தனைகளை நன்கு அறிந்தும் இ-ஏலம் கேட்டதாக கருதப்படும்.

7. இ-ஏலம் கேட்பவர்கள் கிலோ ஒன்றுக்கு என்ற அடிப்படையில் ஏலம் கேட்கவேண்டும்.

8. உயர்ந்த கேள்விதாரருக்கு இ-ஏலம் முடிவு செய்யப்படும். திருக்கோயில் நலன் கருதி எந்த கேள்வியையும் ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ, எந்த ஏல தாரரையும் ஏல நடவடிக்கையிலிருந்து நீக்கவோ, திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

9. இ-ஏலம் எடுத்தவர், இ-ஏலம் ஊர்ஜிதமான 7 தினங்களுக்குள் ஏல தொகையில் 50 சதவிகிதத்தை MSTC நிறுவனத்தில் செலுத்திவிடவேண்டும்.

10. இந்த இ-ஏல தொகையினை அங்கீகரித்து, அறநிலையத்துறை அனுமதி வரப்பெற்றதும் மீதமுள்ள ஏல விற்பனை தொகையினை பாக்கியில்லாமல் இத்திருக்கோயிலில் செலுத்தி உரிய அச்சிட்டு ரசீது பெற்று, தங்கள் சொந்த செலவில் டெலிவரி எடுத்துக்கொள்ள வேண்டும்.

11. எக்காரணத்தைக்கொண்டும் ஏலத்தொகையில் டெபாசிட் தொகையை ஈடு செய்யப்படமாட்டாது.

12. இ-ஏலம் எடுத்தவர் முழு தொகையையும் செலுத்த தவறினாலோ, இ-ஏல நிபந்தனைகளை மீறினாலோ அன்னாரின் ஏலம் ரத்து செய்யப்படுவதுடன் மறு இ-ஏலம் நடத்தப்படும். மறு இ-ஏலத்திற்கு கொண்டு வருவதானால் திருக்கோயிலுக்கு ஏற்படும் சகல இழப்புகளையும் மேற்படி ஏலதாரரே பொறுப்பாக்கப்படுவர். மறு இ-ஏலத்திற்கு அதிக தொகைக்கு சென்றால் அதில் பங்குகோர மேற்படி யாருக்கும் உரிமையில்லை. மேலும் டெபாசிட் தொகையை ஆலய உடமையாக்கப்படும்.

13. மேற்படி இ-ஏலம் தொடர்பாக வருமான வரி, GST உள்ளிட்ட வரிகள் ஏதேனும் செலுத்த வேண்டுமானால், இ-ஏலம் உரிமம் பெற்றவர் தம் சொந்த செலவில் செலுத்தி இரசீது நகலினை திருக்கோயில் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

14. அதன் பின்னரே டெபாசிட் தொகையை காசோலையாக திருப்பியளிக்கப்படும். டெபாசிட் தொகைக்கு வட்டி ஏதும் இல்லை.

15. இ-ஏலம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து, அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

16. இ-ஏலம் கேட்பவர்கள் அனைத்து நிபந்தனைகளை நன்கு அறிந்து கேட்பதாக கருதப்படும்.

17. திருக்கோயிலின் நன்மையைக் கருதி காரணம் ஏதும் கூறாமல் இ-ஏலத்தை நிராகரிக்கவோ, நிபந்தனைகளை சேர்க்கவோ, தளர்த்தவோ, இ-ஏலத்தை ஒத்திவைக்கவோ, திருக்கோயில் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

18. ராஜீயம், தெய்வீகம் இவற்றுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

19. இதர நிபந்தனைகள் ஏதேனும் இருப்பின் ஏலம் விடுவதற்கு முன்பு தெரிவிக்கப்படும்.

**து.ரு.பிரகாஷ்,**
செயல் அலுவலர்.

**அஞ்சன் லோகமித்ரா,**
பரம்பரை அறங்காவலர்.

நாள் : 06.12.2025
இடம் : பெரியபாளையம்